# இஸ்ரேலுக்கு இந்தியா உறுதுணை

**புது தில்லி, அக்.10:** 'போர் காரணமாக எழுந்துள்ள இக்கட்டான சூழ்நிலையில் இஸ்ரேலுடன் இந்திய மக்கள் உறுதியாக துணை நிற்பர்' என்று அந்த நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் உறுதிபடத் தெரிவித்தார்.

பாலஸ்தீனத்தின் காஸா பகுதியில் இருந்து ஹமாஸ் படையினர் இஸ்ரேல் மீது கடந்த சனிக்கிழமை (அக்.7) அதிகாலை ராக்கெட்டுகளை வீசியும், எல்லை தாண்டியும் திடீர் தாக்குதல் நடத்தினர்; பலரை பிணைக்கைதிகளாக ஹமாஸ் படையினர் பிடித்துச் சென்றனர்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து போர் பிரகடனம் செய்த இஸ்ரேல், ஹமாஸ் படையினரைக் குறிவைத்து தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதில் இருதரப்பிலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3,000-ஐ கடந்தது; ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு பிரதமர் மோடி சனிக்கிழமை கண்டனம் தெரிவித்ததுடன், இஸ்ரேலுக்கு இந்தியா துணை நிற்பதாகவும் தெரிவித்தார். அதுபோல, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்தன.

**5 நாடுகள் கூட்டறிக்கை:** இஸ்ரேல்-ஹமாஸ் படையினர் இடையேயான மோதல் 4-ஆவது நாளாக செவ்வாய்க்கிழமையும் (அக்.10) தொடர்ந்த நிலையில், இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா, இத்தாலி, ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் கூட்டறிக்கை வெளியிட்டன. அதில் ஹமாஸ் படையினரின் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்ததுடன், 5 நாடுகளும் இஸ்ரேலுக்கு துணை நிற்பதாகத் தெரிவித்தன. இதே போன்று, பிரதமர் நரேந்திர மோடியும், இஸ்ரேலுடன் இந்தியா துணை நிற்பதாக மீண்டும் உறுதி தெரிவித்துள்ளார்.

## பிரதமர் நரேந்திர மோடி



(கோப்புப் படம்)



எல்லை நோக்கி செவ்வாய்க்கிழமை முன்னேறிய இஸ்ரேல் பீரங்கி படையினர்.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தொலைபேசி மூலம் பிரதமர் மோடியை செவ்வாய்க்கிழமை தொடர்புகொண்டு அங்குள்ள நிலவரம் குறித்து விவரித்தபோது, இந்த உறுதியை பிரதமர் அளித்துள்ளார்.

இந்த உரையாடல் குறித்து தனது 'எக்ஸ்' வலைதள பக்கத்தில் பிரதமர் மோடி வெளியிட்ட பதிவில், 'இஸ்ரேல் பிரதமர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசினார். இந்த கடினமான நேரத்தில் இஸ்ரேலுடன் இந்திய மக்கள் உறுதியாக துணைநிற்பர். பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் வெளிப்பாடுகளையும் இந்தியா உறுதிபட, சந்தேகத்துக்கு இடமின்றி கண்டிக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

**இஸ்ரேல் நன்றி:** இந்தியாவின் ஆதரவுக்கு இஸ்ரேல் நன்றி தெரிவித்தது. இது குறித்து இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் நோர் கிலோன் வெளியிட்ட பதிவில், 'பிரதமர் மோடிக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய சகோதரர், சகோதரிகளிடமிருந்து ஏராளமான ஆதரவு இஸ்ரேலுக்கு கிடைத்து வரும் நிலையில், ஒவ்வொருவருக்கும் நேரடியாக நன்றிகூற இயலவில்லை. எனவே, எனது நன்றியை அனைத்து நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

## பிரச்னைக்கு தீர்வுகாண இந்தியா முக்கியப் பங்கு வகிக்கும்: பாலஸ்தீன தூதர்

**புது தில்லி, அக்.10:** இஸ்ரேல்-பாலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளுக்கும் நண்பராக உள்ள இந்தியா, பாலஸ்தீனம் தொடர்பாக நிலவி வரும் பதற்றத்தைத் தணிப்பதிலும், அது தொடர்பான பிரச்னைக்குத் தீர்வு காண்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கும் என இந்தியாவுக்கான பாலஸ்தீன தூதர் அட்னான் அபு அல்ஹைஜா செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது: ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, மேற்கு ஆசிய நாடுகளுடன் இணைந்து, அமைதிக்கான முயற்சிகளில் ஈடுபடுமாறு இஸ்ரேலுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க முடியும். மகாத்மா காந்தி காலத்திலிருந்து பாலஸ்தீன பிரச்னைக்கான தொடக்கத்தை இந்தியா நன்கு அறியும். பாலஸ்தீனம், இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளுக்கும் நண்பராக உள்ள இந்தியா, இந்த விவகாரத்தில் தீர்வு காண்பதில் முக்கியப் பங்கு வகிக்கும்.

இரு நாடுகள் என்ற தீர்வை எட்டும் வகையில் இரு தரப்புக்கும் இடையே நேரடி பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க தனது ஆதரவை இந்தியா தொடர்ந்து அளித்து வருகிறது.

இந்தப் போர் நிறைவு பெற்றாலும், அமைதிக்கு தீர்வு காணப்படவில்லை எனில், மீண்டும் மோதல் ஏற்படும். உலகின் பிற நாட்டு மக்களைப் போல பாலஸ்தீன மக்களும் தங்களது உரிமைகளைப் பெற வேண்டும். இதற்கான உரிமை அவர்களுக்கு உள்ளது. நாங்கள் விரும்புவது அமைதி மட்டுமே.

முதன்மையான பிரச்னைக்குத் தீர்வு காணப்படவில்லை எனில், அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே இணக்கமான உறவை ஏற்படுத்தும் அமெரிக்காவின் முயற்சிகள் எவ்விதப் பலனையும் அளிக்காது. ஹமாஸுக்கு ஈரான் ஆதரவு அளிப்பதாக இஸ்ரேல் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என்றார் அவர்.

## தமிழர்களை மீட்க நடவடிக்கை: தமிழக அரசு உறுதி

**சென்னை, அக். 10:** இஸ்ரேல் - ஹமாஸ் போர்ச் சூழலால் அங்கு சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட செய்தி:-இஸ்ரேல், பாலஸ்தீனத்தில் சிக்கித் தவிக்கும் தமிழர்களை மீட்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறையால் உடனடியாக உதவி எண்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களோ அல்லது தமிழ்நாட்டில் உள்ள அவர்களின் குடும்பத்தினரோ தமிழக அரசைத் தொடர்பு கொள்ளலாம். அதன்படி, 87602 48625, 99402 56444, 96000 23645 ஆகிய எண்களைத் தொடர்பு கொண்டு விவரங்களைத் தெரிவிக்கலாம். மேலும், nrtchennai@tn.gov.in, nrtchennai@gmail.com ஆகிய மின்னஞ்சல் முகவரிகள் மூலமாகவும் தகவல்களை அனுப்பலாம்.

**84 பேர் குறித்த தகவல்கள்:** இஸ்ரேல் பாலஸ்தீனப் பகுதிகளில் வசிக்கும் தமிழர்கள் தொடர்பு கொள்ளப்பட்டு வருகின்றனர். இதுவரையில் சுமார் 84 பேர்களின் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அவர்கள் அங்கு மேற்படிப்புக்காகவும் திட்டப் பணிகளுக்காகவும் சென்றவர்கள். இதில் சில சுற்றுலா பயணிகளும் அடங்குவர். அவர்கள் பெர்சிபா, எருகாம், பென் குரியான், கிழக்கு ஜெருசலேம், ஜெருசலேம் பல்கலைக்கழகம், டெல் அவிவ் பல்கலைக்கழகம் போன்ற இடங்களில் தங்கியுள்ளனர்.

இந்தத் தகவல்கள் உடனடியாக மத்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்திடமும், இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகத்திடமும் பகிரப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழர்களை உடனடியாக மீட்டு தமிழ்நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தரவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அங்குள்ள தமிழர்கள் தாங்கள் இப்போது நலமாக இருப்பதாகவும், தங்குமிடம் மற்றும் உணவுத் தேவைகளுக்கான சிரமங்கள் ஏதுமில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

அங்குள்ள தமிழர்களுடன் தமிழ்நாடு அரசு தொடர்ந்து தொடர்பில் இருக்கிறது. சூழ்நிலை மற்றும் மத்திய அரசின் ஆலோசனையின் அடிப்படையில் அவர்களை தமிழ்நாட்டுக்கு அழைத்து வருவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வரி நிலுவையை வணிகர்கள் செலுத்த அக்.16 முதல் சமாதானத் திட்டம்

**சென்னை, அக். 10:** நிலுவையில் உள்ள வரிகளை வணிகர்கள் செலுத்தும் வகையில், வரும் 16-ஆம் தேதி முதல் சமாதானத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

இது தொடர்பாக தமிழக சட்டப் பேரவையில் விதி 110-ன் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பு விவரம்:

**நிலுவைத் தொகை ரூ.25,000 கோடி:** தமிழ்நாடு அரசுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை தொடர்பாக 2.11 லட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றில் வணிகர்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் வழக்குகள் மட்டும் ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 569 உள்ளது. இவற்றில் வசூல் செய்ய வேண்டிய நிலுவைத் தொகை ரூ.25,000 கோடியாகும். மிக அதிக எண்ணிக்கையில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், வணிகவரித் துறையினர் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாவதுடன், அரசுக்கு வர வேண்டிய வருவாயும் பெருமளவில் நிலுவையாக உள்ளது.

**வட்டி - அபராதம் நிலுவை:** நாடு முழுவதும் கடந்த 2017-ஆம் ஆண்டு ஜி.எஸ்.டி. எனப்படும் சரக்குகள் சேவை வரி நடைமுறைப்படுத்தப்பட்டது. எனினும், ஏற்கெனவே நடைமுறையில் இருந்த வரிச் சட்டங்களின் கீழ் அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய வரி, அதன் மீதான வட்டி மற்றும் அபராதம் ஆகியவை இன்னும் பல வணிகர்களின் பெயரில் நிலுவையில் உள்ளன. எனவே, பழைய நிலுவைத் தொகைகளை வசூலிப்பதில் ஒரு புதிய சமாதானத் திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

**யாருக்கு முழு விலக்கு-சலுகைகள்?:** புதிய சமாதானத் திட்டத்தின்படி, வரி மதிப்பீட்டு ஆண்டில் ரூ.50,000-த்துக்குக் குறைவாக வரி, வட்டி மற்றும் அபராதத் தொகை செலுத்த வேண்டிய வணிகர்களுக்கு நிலுவைத் தொகை முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும். ஒவ்வொரு வரி மதிப்பீட்டு ஆண்டிலும் ரூ.50,000-த்துக்கு உட்பட்ட நிலுவை இனங்களுக்கு வரி செலுத்துவதில் இருந்து முழு விலக்கு அளிக்கப்படும்.

தமிழக அரசின் இந்த முடிவு காரணமாக, ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 398 வழக்குகளில் தொடர்புடைய 95 ஆயிரத்து 502 சிறு வணிகர்களின் நிலுவைத் தொகை முழுமையாக தள்ளுபடி செய்யப்படும்.

**நான்கு வகைப் பிரிவினர்:** நிலுவைத் தொகை தள்ளுபடி செய்யப்பட்ட வணிகர்கள் தவிர, இதர வணிகர்கள் நான்கு வகை வரம்புகளின் கீழ் கொண்டுவரப்படுகின்றனர். அதன்படி, ரூ.50 ஆயிரம் முதல் ரூ.10 லட்சம் வரை நிலுவையில் உள்ளவர்கள், ரூ.10 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை வரி நிலுவை உள்ளவர்கள், ரூ.1 கோடி முதல் ரூ.10 கோடி வரை நிலுவை வைத்திருப்பவர்கள், ரூ.10 கோடிக்கு மேல் நிலுவை உள்ளவர்கள் என நான்கு பிரிவினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**வட்டி முழுவதும் தள்ளுபடி:** நான்கு வகை வரிப் பிரிவினரில், முதல் வரம்பில் உள்ளவர்கள், மொத்த நிலுவைத் தொகையில் 20 சதவீதமோ அல்லது குறிப்பிட்ட சதவீதத் தொகையைச் செலுத்தியோ நிலுவை வழக்குகளில் இருந்து விடுபடலாம்; இதர மூன்று வரம்புகளில் உள்ள வணிகர்கள், வரி, வட்டி மற்றும் அபராதத் தொகையில் குறிப்பிட்ட சதவீதத்தைச் செலுத்தினால், நிலுவை வழக்குகளில் இருந்து விடுபடலாம். வரி விதிப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களுக்கும், ஏற்றுக் கொள்ளாமல் மேல்முறையீடு செய்து இருப்பவர்களுக்கும் தனித்தனியாக நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. நிலுவைத் தொகையைச் செலுத்த முன்வரும் நாள் வரையிலும் வணிகர்களின் கணக்கில் சேர்ந்துள்ள திரண்ட வட்டித் தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும்.

**4 மாதங்கள் திட்டம் அமல்:** வரும் அக்டோபர் 16-ஆம் தேதி முதல் சமாதானத் திட்டம் நடைமுறைக்கு வரும். நான்கு மாதங்கள், அதாவது அடுத்த ஆண்டு பிப்ரவரி 15-ஆம் தேதி வரை திட்டம் அமலில் இருக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

முதல்வரின் அறிவிப்புக்கு, திமுகவின் தோழமைக் கட்சிகள் அனைத்தும் வரவேற்று பாராட்டுத் தெரிவித்தன.

**மசோதா நிறைவேறியது:** முதல்வரின் அறிவிப்பைத் தொடர்ந்து, புதிய சமாதானத் திட்டத்துக்கான திருத்த மசோதாவை, பேரவையில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தாக்கல் செய்தார். இந்த மசோதா, செவ்வாய்க்கிழமையன்றே விவாதத்துக்கு எடுக்கப்பட்டு குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து, பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதா ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அரசிதழில் வெளியிடப்படும்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின்



வரும் அக்டோபர் 16 முதல் செயல்படுத்தப்படவுள்ள வணிக வரி நிலுவைக்கான சமாதானத் திட்டம் குறித்து தமிழக சட்டப் பேரவையில் செவ்வாய்க்கிழமை அறிவிப்பு வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின்.

## 185 வணிகர்களின் வரி நிலுவை ரூ.13,100 கோடி!

**சென்னை, அக். 10:** தமிழகத்தில் 185 வணிகர்களின் வரி நிலுவை ரூ.13 ஆயிரத்து 100 கோடி என வணிகவரித் துறை தெரிவித்துள்ளது.

வணிகர்கள் வரி நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு வசதியாக வரும் 16-ஆம் தேதி முதல் சமாதானத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சமாதானத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள ஐந்து வகைப் பிரிவுகளில் உள்ள வணிகர்களின் எண்ணிக்கையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் உள்ள வணிகர்கள், வரி நிலுவை விவரம் வருமாறு:-

**வரி நிலுவை வைத்துள்ளோர் விவரம்:** 1. ரூ.50 ஆயிரத்துக்குக் குறைவாக நிலுவை வைத்திருக்கும் வணிகர்களின் எண்ணிக்கை ஒரு லட்சம்; அவர்களின் ரூ.147 கோடி நிலுவை முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படுகிறது; 2. ரூ.50 ஆயிரத்தில் இருந்து ரூ.10 லட்சம் வரை நிலுவை வைத்திருக்கும் வணிகர்கள் 38,200 பேர்; வரி நிலுவை ரூ.1,400 கோடி; 3. ரூ.10 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை நிலுவை வைத்திருக்கும் வணிகர்கள் 7,265 பேர்; வரி நிலுவை ரூ.3,495 கோடி; 4. ரூ.1 கோடி முதல் ரூ.10 கோடி வரை நிலுவை வைத்திருக்கும் வணிகர்கள் 1,454 பேர்; வரி நிலுவை ரூ.1,800 கோடி; 5. ரூ.10 கோடிக்கு மேல் நிலுவை வைத்திருக்கும் வணிகர்கள் 185 பேர்; வரி நிலுவை ரூ.13 ஆயிரத்து 100 கோடி.

# காஸாவில் இஸ்ரேல் குண்டு மழை!

ஜெருசலேம், அக். 10: தங்கள் நாட்டுக்குள் ஊடுருவி இதுவரை இல்லாத மிகப் பெரிய தாக்குதல் நடத்தியுள்ள ஹமாஸ் படையினருக்குப் பதிலடியாக, அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள காஸா பகுதியில் தனது குண்டுவீச்சை இஸ்ரேல் செவ்வாய்க்கிழமை தீவிரப்படுத்தியது.

அதையடுத்து, அந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி தவித்து வருவதாக அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

யாரும் எதிர்பாராத வகையில் இஸ்ரேலுக்குள் அதிரடியாக நுழைந்து ஹமாஸ் படையினர் சனிக்கிழமை நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக காஸா பகுதியில் போர் விமானங்கள் மூலம் இஸ்ரேல் பாதுகாப்புப் படை தாக்குதல் நடத்தி வருகிறது.

சனிக்கிழமை நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 17 ஹமாஸ் ராணுவ நிலைகள் மீதும், 4 நிர்வாக மையங்கள் மீதும் குண்டுகள் வீசப்பட்டன. மேலும், காஸா சிட்டியிலுள்ள ஹமாஸ் வானொலி நிலையம் இயங்கி வந்த 11 அடுக்குக் கட்டடம் தரைமட்டமாக்கப்பட்டது. காயமடைந்த ஹமாஸ் படையினர் சிகிச்சைப் பெற்று வந்ததாகக் கருதப்பட்ட இரு மருத்துவமனைகள் மீதும் இஸ்ரேல் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

இரண்டாவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் காஸா பகுதியில் தாக்குதலைத் தொடர்ந்த இஸ்ரேல் படை, முந்தைய நள்ளிரவு முழுவதும் 426 இடங்களில் குண்டுகளை வீசியது. இதில் பெயிட் ஹனுன் நகரம் ஏறத்தாழ முழுமையாக தரைமட்டமானது.

பெரும்பாலும் குடியிருப்புகள், ஹமாஸ் அதிகாரிகளின் இல்லங்கள், அந்தப் பகுதியில் இணையதள சேவையை அளித்து வந்த வான் கோபுரம் ஆகியவற்றைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் உயிரிழந்தவர்களில் பெண்கள் குழந்தைகள் உள்ளிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 19 பேரும் அடங்குவர்.

கடந்த 1973-க்குப் பிறகு முதல் முறையாக நாட்டில் ராணுவ அவசரநிலையை இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரவை அதிகாரபூர்வமாக ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

அதன்பிறகு ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் திங்கள்கிழமை அதிகாலை வரை காஸா பகுதியில் சுமார் 500 இடங்களில் இஸ்ரேல் விமானங்கள் தாக்குதல் நடத்தின. அந்த இடங்களில், 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியுள்ள அல்-ஷாட்டி முகாமும், ஜபாலா முகாமிலுள்ள சந்தையும் அடங்கும். ஜபாலா முகாம் சந்தையில் இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தியபோது, அந்தச் சந்தையில் பொதுமக்கள் கூட்டமாக இருந்தனர்.

இந்தத் தாக்குதல்களில் குழந்தைகள் உள்பட ஏராளமானவர்கள் உயிரிழந்தனர்.

அதே நாளில் காஸா பகுதியை முழுமையாக முற்றுகையிட பாதுகாப்புத் துறை அமைச்சர் யோயவ் காலன்ட் உத்தரவிட்டார். அந்தப் பகுதிக்கு ஏற்கெனவே மின்சார விநியோகம் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த நிலையில், இந்த உத்தரவுக்குப் பிறகு காஸாவுக்குள் உணவுப் பொருள்கள், எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் செல்வதற்கும் தடை ஏற்படுத்தப்பட்டது.

இதற்கிடையே, ஹமாஸ் படையினரால் ஊடுருவப்பட்ட தங்கள் நாட்டுப் பகுதிகள் அனைத்தையும் இஸ்ரேல் ராணுவம் மீட்டது.

இந்த நிலையில், 4-ஆவது நாளாக காஸா பகுதியில் இஸ்ரேல் விமானங்கள் இதுவரை இல்லாத அளவுக்கு மிகத் தீவிரமாக குண்டு வீச்சு நடத்தின.

முன்னதாக, தொலைக்காட்சியில் உரையாற்றிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'நம்மிடமிருந்து போரை எதிர்பார்த்துதான் ஹமாஸ் படையினர் தாக்குதல் நடத்தினர். அவர்களுக்குத் தேவையான போரை அவர்கள் மீது தொடர்ந்துள்ளோம்.

ஹமாஸ் அமைப்பு இஸ்லாமிய தேச (ஐஎஸ்) அமைப்பைவிட மிகவும் கொடூரமானது ஆகும். அந்த அமைப்புக்கு நாம் அளிக்கும் பதிலடி, இன்னும் பல தலைமுறைகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கும்' என்று எச்சரித்திருந்தார்.

அதை உறுதிப்படுத்தும் வகையில், காஸா பகுதியில் இஸ்ரேல் போர் விமானங்கள் இதுவரை இல்லாத அளவுக்கு மிகத் தீவிரமான தாக்குதலை செவ்வாய்க்கிழமை நடத்தின.

இனி வரும் நாள்களில் இந்தத் தீவிரம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே இஸ்ரேலின் முற்றுகையால் உணவு, குடிநீர் மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ள சிறிய பரப்பளவைக் கொண்ட காஸாவில், வான்வழித் தாக்குதல் தீவிரமாகி வருவது நிலைமையை மேலும் மோசமாக்கும் என்று கூறப்படுகிறது.

இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காஸா பகுதியில் இருந்து அந்த நாடு கடந்த 2005-ஆம் ஆண்டு வெளியேறியது.

அதன் பிறகு பாலஸ்தீனத்துக்கு நடைபெற்ற தேர்தலில், தீவிர நிலைப்பாட்டைக் கொண்ட ஹமாஸ் அமைப்பு காஸா பகுதியில் வெற்றி பெற்றது. அதிலிருந்து ஹமாஸ் ஆயுதக் குழுவினருக்கும், இஸ்ரேல் படையினருக்கும் இடையே தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் ராக்கெட் தாக்குதல் நடத்துவது, அதற்குப் பதிலடியாக காஸாவில் ஹமாஸ் நிலைகள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்துவது போன்ற நிகழ்வுகளால் இந்தப் பதற்றம் பெரும் போராக உருவெடுத்துள்ளது.

இந்தச் சூழலில், ஹமாஸ் மற்றும் மற்ற ஆயுதக் குழுவினர் காஸா பகுதியிலிருந்து இஸ்ரேல் மீது ஆயிரக்கணக்கான ராக்கெட் குண்டுகளை வீசி சனிக்கிழமை தாக்குதல் நடத்தினர்.

அதைத் தொடர்ந்து இஸ்ரேலுக்குள் நிலம், கடல், வான் வழியாக 22 இடங்களில் ஊடுருவிய சுமார் 1,000 ஹமாஸ் அமைப்பினர், சுமார் 25 கி.மீ. வரை உள்ளே நுழைந்து பொதுமக்களையும், ராணுவத்தினரையும் சுட்டுக் கொன்றனர். இது தவிர, பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என பலரை ஹமாஸ் படையினர் பிணைக் கைதிகளாகப் பிடித்து காஸா பகுதிக்கு கொண்டு சென்றனர்.



காஸா சிட்டியில் இஸ்ரேல் செவ்வாய்க்கிழமை நடத்திய விமானத் தாக்குதலில் பலத்த சேதமடைந்த கட்டடங்கள்.

## 3,300–ஐ கடந்த உயிரிழப்பு

இஸ்ரேல் – ஹமாஸ் போரில் இருதரப்பிலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3,363–ஆக அதிகரித்துள்ளது.

தங்கள் நாட்டுக்குள் ஹமாஸ் படையினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்காவிலுள்ள இஸ்ரேல் தூதரகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹமாஸ் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,008–ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

**1,500 ஹமாஸ் படையினரின் உடல்கள்** இதற்கிடையே, தங்கள் எல்லைக்குள் நுழைந்து சண்டையிட்ட 1,500 ஹமாஸ் படையினரின் உடல்களை மீட்டுள்ளதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

**855 பாலஸ்தீனர்கள் மரணம்:** காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 855 பேர் உயிரிழந்ததாக அந்தப் பகுதி சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## இந்திய செல்வந்தர்கள் பட்டியல்

# அதானியை முந்தினார் அம்பானி

மும்பை, அக்.10: இந்திய செல்வந்தர்களின் பட்டியலில் ரூ.8.08 லட்சம் கோடியுடன் ரிலையன்ஸ் நிறுவனங்களின் தலைவர் முகேஷ் அம்பானி முதலிடத்தில் உள்ளார்.

கடந்த ஆண்டு முதலிடத்தில் இருந்த அதானி நிறுவனங்களின் தலைவர் கௌதம் அதானியின் சொத்துகள் 57 சதவீதம் சரிந்து ரூ.4.47 லட்சம் கோடியுடன் இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். அமெரிக்காவின் ஹிண்டன்பர்க் நிறுவனம் கடந்த ஜனவரியில் வெளியிட்ட அறிக்கையால் அதானியின் சொத்து மதிப்பு சரிந்தது.

'ஹுருன் இந்தியா' வெளியிட்டுள்ள இந்திய செல்வந்தர்களின் பட்டியலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2019-இல் 6-ஆவது இடத்தில் இருந்த அதானியின் சொத்துகள் நிகழாண்டு 5 மடங்கு அதிகரித்து இரண்டாம் இடத்தில் உள்ளார். முகேஷ் அம்பானியின் சொத்துகள் கடந்த 5 ஆண்டுகளில் 2.1 மடங்கும், மூன்றாம் இடத்தில் உள்ள தடுப்பூசி தயாரிப்பு நிறுவனத்தின் தலைவர் அதார் பூனாவாலாவின் சொத்து மதிப்பு (ரூ.2.78 லட்சம் கோடி) மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

ஹெச்சிஎல் நிறுவனத்தின் தலைவர் சிவ நாடாரின் சொத்து மதிப்பு 23 சதவீதம் அதிகரித்து (ரூ.2.28 லட்சம் கோடி) நான்காவது இடத்தில் உள்ளார்.

இந்தியாவில் மொத்தம் 1,319 செல்வந்தர்கள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு ஒவ்வொரு மூன்று வாரங்களுக்கு 2 புதிய கோடீஸ்வரர்கள் இந்தியாவில் உருவாகி வந்தனர். தற்போது இந்த எண்ணிக்கை 259-ஆக உள்ளது. இது கடந்த 12 ஆண்டுகளில் 4 மடங்கு அதிகமாகும்.

இந்தியாவில் 51 செல்வந்தர்களின் சொத்துகள் நிகழாண்டு இரட்டிப்பாகி உள்ளது. கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 24-ஆக இருந்தது.

மும்பையில் சேர்ந்த 328 பேரும், தில்லியில் 199 பேரும், பெங்களூரில் 100 பேரும் செல்வந்தர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

செல்வந்தர்களை உருவாக்கும் முதல் 20 நகரங்களில் முதல் முறையாக திருப்பூரும் இடம் பெற்றுள்ளது.



**முதல் 10 செல்வந்தர்களின் சொத்து மதிப்பு (லட்சம் கோடியில்)**

| | | |
|---|---|---|
| 1. | முகேஷ் அம்பானி | ரூ.8.08 |
| 2. | கௌதம் அதானி | ரூ.4.47 |
| 3. | அதார் பூனாவாலா | ரூ.2.78 |
| 4. | சிவ நாடார் | ரூ.2.28 |
| 5. | கோபிசந்த் ஹிந்துஜா | ரூ.1.76 |
| 6. | திலீப் சங்வி | ரூ.1.64 |
| 7. | எல்என் மித்தல் | ரூ.1.62 |
| 8. | ராதாகிருஷ்ணன் தாமினி (டிமார்ட்) | ரூ.1.43 |
| 9. | குமார்மங்களம் பிர்லா | ரூ.1.25 |
| 10. | நீரஜ் பஜாஜ் | ரூ.1.20 |

EVA STALIN

# ஜாதிவாரி கணக்கெடுப்பு: புதிய தொடக்கம்!

பிகாரில் ஜாதிவாரியாக மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தி அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. பிகாரின் மொத்த மக்கள்தொகை 13 கோடியே 7 லட்சத்து 25 ஆயிரத்து 310 என்று அந்த அறிக்கை தெரிவிக்கிறது. மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான மக்கள்தொகையைக் கொண்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

இந்தப் புள்ளிவிவரக் கணக்கு மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 36 % ஆகும். இதில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 27.12 % ஆகவும், பட்டியல் இனத்தவர் 19.65 % ஆகவும், இட ஒதுக்கீடு இல்லாத உயர் ஜாதியினர் 13.52 % ஆகவும், பட்டியல் இன பழங்குடியின மக்கள் 1.68 % ஆகவும் ...



முனைவர் வைகைச்செல்வன்

**தமிழகத்தில் 350-க்கும் மேற்பட்ட ஜாதிகள் உள்ளன. பெரும்பாலான ஜாதிகளில் உட்பிரிவுகள் ஏராளம். ஒரு ஜாதிக் கட்சித் தலைவரைக் கேட்டால், 'எங்கள் சமூகத்தினர் ஒரு கோடிக்கும் அதிகமானோர் இருக்கிறார்கள்' என்று சொல்வார்கள். இதற்குக் காரணம் நம்மிடம் தெளிவான ஜாதிவாரி கணக்கெடுப்புத் தரவுகள் இல்லாததே.**

கட்டுரையாளர்:
**முன்னாள் அமைச்சர்.**